

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.12.2024) ஃபெஞ்சல் புயல் மழை காரணமாக செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரம் முத்தமிழ் அரங்கத்தில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு மருத்துவ முகாம் அமைத்து, மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதை பார்வையிட்டார். இந்த நிகழ்வில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் கா.செல்வம், திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி, மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ஆ.ரா. ராகுல் நாத், மாவட்ட ஆட்சித் தலைவர் ச.அருண்ராஜ் உள்பட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.12.2024) ஃபெஞ்சல் புயல் மழை காரணமாக செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரம் முத்தமிழ் அரங்கத்தில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு அரிசி, பிஸ்கட், பாய் போர்வை உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கினார். இந்த நிகழ்வில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் கா. செல்வம், திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி, மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ஆ.ரா. ராகுல் நாத், மாவட்ட ஆட்சித் தலைவர் ச.அருண்ராஜ் உள்பட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### விமானப் போக்குவரத்துத் துறையில்

# செயற்கை நுண்ணறிவு கற்றல் இயந்திரம் பயன்படுத்தப்படுமா?

## மக்களவையில் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!



புதுடெல்லி, டிச. 2 -

விமான போக்குவரத்து துறையில் செயற்கை நுண்ணறிவு கற்றல் இயந்திரங்களை பயன்படுத்தும் திட்டம் ஒன்றிய அரசிடம் உள்ளதா? என மக்களவையில் அரக்கோணம் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி? எழுப்பினார்.

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் அவர்கள் 28 நவம்பர் 2024 அன்று மக்களவையில், விமானப் போக்குவரத்து துறையின் மேம்பாட்டிற்காக செயற்கை நுண்ணறிவு மற்றும் கற்றல் இயந்திரங்கள் போன்ற கணினி தொழிநுட்பங்களை பயன் படுத்தும் திட்டங்கள் ஏதேனும் உள்ளதா? என்றும் அது தொடர்பான விவரங்களை உறுப்பினர்களுக்கு அளிக்க இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் விமானப் போக்குரவரத்து துறை இணையமைச்சர் முரளிதர் மஹால் அவர்களிடம் விரிவா ன கேள்வி எழுப்பினார்.

ஒன்றிய அரசின் விமானப் போக்குரவரத்து துறை இணையமைச்சர் அளித்த பதில் பின் வருமாறு:

விமானப் போக்குவரத்து துறையை மேம்பாட்டினை உறுதிப்படுத்தவும், விமான நிலையங்களை நவீனப்படுத்தவும், செயற்கை நுண்ணறிவு மற்றும் கற்றல் இயந்திரம் போன்ற கணினி தொழி ல்நுட்பங்கள் மிகவும் உதவியாக இருந்து வருகிறது என்றும், இவற்றின் பயன்பாட்டினால் கணினி கட்டமைப்புகள் அதிகரித்து வந்துள்ளது என்றும், இதன் தொடர் வழிமுறைகள் அதிகரித்த வண்ணம் உள்ளது என்றும் ஒன்றிய அரசின் விமானப் போக்குரவரத்து துறை இணையமைச்சர் முரளிதர் மஹால் அவர்கள், மக்களவையில், திமுக அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதில் அளித்துள்ளார்.

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் - ஆடுதுறை உத்திராபதி - கு.ஹரிசங்கர் சிறப்புரை

# மதுரவாயல் -92 வது வட்டத்தில் 'உதயநிதி உதயநாள்'விழாக் கூட்டம்!

## காரம்பாக்கம் கணபதி எம்.எல்.ஏ. - நொளம்பூர் வே.ராஜன் பங்கேற்பு- எம்.எம்.ஜெயரத்தினம் தலைமை!

சென்னை, டிச. 2-

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்குப்பகுதி 92-வது வட்ட தி.மு.க. சார்பில் துணை முதல்வர் உதயநிதி உதயநாள் விழா தெருமுனைக் கூட்டம் இன்று (2-12.2024 திங்கள்) மாலை 6 மணிக்கு முகப்பேர் கிழக்கு பேருந்து நிலையம் அருகில் வட்டச் செயலாளர் எம்.எம். ஜெயரத்தினம் தலைமையில் நடைபெறுகிறது.

மதுரவாயல் வடக்கு பகுதி கழக செயலாளர், 11வது மண்டல குழு தலைவர் நொளம்பூர் வே.ராஜன் முன்னிலை வகிக்கிறார்.

எம்.ஏ.செந்தில்சுரேஷ், கே.குமரேசன், எம்.சி.எழிலரசு, மதுரவாயல், ஏ.ஜி.வேலன், டாக்டர்.எம்.சி.அழகிரி, ஏ.சுந்தரி, எம்.எஸ்.பிரபா, எம்.எஸ். சந்தானம், எஸ்.பாலாஜி, எம்.ஜி.சுரேஷ், இ.லீலாவதி, டி.புகழேந்தி, எம்.எஸ்.ஜெயசிம்மன், கே.முருகன், கே.பிரகாஷ், பி.நாகராஜ், எம்.பி.நவசுந்தர், சி.விமல்தாஸ், கே.பிரகாஷ், ஜி. நாகராஜ், டகிருஷ்ணமூர்த்தி, வி.ஆர்.மகேந்திரன், எம்.சபரிதாஸ், எம்.ஜி.எம்.புகழேந்தி ஆகியோர் வரவேற்கின்றனர்.

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, மாவட்டச் செயலாளர் அமைச்சர் மா.சுப்பி ரமணியன், தலைமை கழகப் பேச்சாளர்கள் ஆடுதுறை உத்திராபதி, கு.ஹரிஷங்கர், கு.காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ., தொகுதி மேலிடப் பார்வையாளர் பி.டி.பாண்டிச் செல்வம் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் அ.ம.துரை வீரமணி, முகப்பேர் நீலகண்டன், ஆர்.கர்ணல், ஆ.மாலினி, தீ.பாலாஜி, எம்.உதயகுமார், மதுரவாயல் வடக்கு பகுதி வட்டகழக செயலாளர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் எஸ். ஜி.மாதவன், ப.ஆலன், எம். கே.பி.அண்ணதாசன், சி.சசிகுமார், எம்.ரூபன், எம்.இஸ்டாலின், ரமணிமாதவன், மாவட்ட பிரதிநிதிகள் ஆர். ரசூல்தீன், ஆர்.ராக்கேஷ், எம். கே.ஞானசேகரன், பி.சங்கர், கா.பிருந்தாவனன், கே.ராஜ்குமார், கோ.முரளி, எம்.ஆர். சதீஷ், சி.டி.ரமேஷ், ஜி.குப்புசாமி,,

மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் மீசை என்.செல்வராஜ் , எம். பி.நவக்குமார் தமிழன்பன், கே.விவேக்குமார், எம்.கே.அரிதாஸ் , வழக்கறிஞர் விஷ்ணு, ஏ.வேலு, சந்த்வாசுதேவன், தினகரன், சண்முகம், ஜி. மூர்த்தி, பி.கோபிநாத், பா. வாசுதேவன், எம்.சங்கர், பி.வி. சௌந்தர், கு.கோவிந்தராஜ், பி.ஜெயபிரகாஷ், ஜெ.பி.ஜெயபிரகாஷ், என். .மணிவண்ணன், கு.ராஜா, மின்னிஜான், ஏ.எஸ்.டி.கமலி மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

எம்.பி.நவராஜ், எம்.என். ராஜ்கமல், எம்.கே.நரேஷ், எம். ஜி.விக்னேஷ், ரோஷன்காந்த், எஸ்.மணிரூபன், எம்.சக்திவேல் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# கே.பி.என். மாயன்

### டிசம்பர் 1 (2013)



கொடைக்கானல் நகரச் செயலாளராக தொடர்ந்து 38 ஆண்டுகள் சிறப்புறப் பணியாற்றியவர். திண்டுக்கல் மாவட்ட தி.மு.க. பொறுப்புக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

'மிசா' சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறை வாசமும் – இந்தி எதிர்ப்பு, சட்டநகல் எரிப்பு, ஈழத் தமிழர் ஆதரவு ஆகிய போராட்டங்கள் மற்றும் கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

கொடைக்கானல் நகராட்சி, நகரியக் குழு உறுப்பினராகவும், கொடைக்கானல் கூட்டுறவு பண்டகசாலைத் தலைவராக இரண்டு முறையும் – கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தின் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.


## துணை முதல்வர்

### உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்: எம்.எஸ்.விஸ்வா தலைமையில் வேளச்சேரி மேற்குப் பகுதி இளைஞரணி சார்பில் உணவு!

#### அரிமா சு.சேகர் – பி.மணிமாறன் – எஸ்.பாஸ்கரன், வே.ஆனந்தம் வழங்கினர்

சென்னை, டிச. 2.

கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா சுப்பிரமணியன், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகராஜா ஆகியோரது ஆலோசனைப்படி, வேளச்சேரி ஜெகநாதபுரம் முதல் பிரதான சாலை சந்திப்பில் உள்ள திமுக அலுவலகம் அருகில் எம் எஸ். விஸ்வா தலைமையில் உணவு நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சி சிறப்பு விருந்தி னர்களாக வேளச்சேரி மேற்கு பகுதிச் செயலாளர் அரிமா சு.சேகர். மாமன்ற உறுப்பினர்கள் வேளச்சேரி பி. மணிமாறன், எஸ். பாஸ்கரன், வே.ஆனந்தம் மற்றும் கழக த. ரமேஷ் ஆகியோர் கலந்துகொண்டு பொது மக்களுக்கு உணவு வழங்கினர் .

இதில் திமுக வட்டச் செயலாளர் பொ.த. மதிவாணன், மாவட்ட பிரதிநிதி வி.ஜி. மோகன், மற்றும் மாவட்ட, பகுதி வட்ட நிர்வாகிகள் , ஆர். சுரேஷ், குமார், வி.சிவசாமி, பகுதி பிரதிநிதி எம்.பாலாஜி, எம்.தியாகராஜன், வட்ட இளைஞரணி அணி துணை அமைப்பாளர் டி. பெரியசாமி, ஏ. ராஜு மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சிறப்பு விருந்தினர் திமுக நிர்வாகிகளுக்கு வேளச்சேரி மேற்கு பகுதி திமுக இளைஞரணி துணை அமைப்பாளர் எம் எஸ்.விஸ்வா கழக துண்டு அணிவித்து மரியாதை செய்தார்.

### நடுநிலையாளர்கள், பொதுமக்கள் பாராட்டு!

# வெள்ள பாதிப்பை நிர்வாகத் திறமையோடு வெற்றி கொண்ட அரசு இது!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு பெருமிதம்!



சென்னை, நவ. 02-

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (1.12.2024) வி.க. நகர் சட்டமன்ற தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, வார்டு 74, கிருஷ்ணதாஸ் நகர் சாலை, மங்களாபுரம் பகுதியில் பெஞ்சல் புயல் கனமழையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நோய் தொற்று பரவாமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அமைக்கப்பட்டுள்ள சிறப்பு மருத்துவ முகாமை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தொடங்கி வைத்து பார்வையிட்டு, மக்களைத் தேடி மருத்துவப் பெட்டகத்தை முகாமிற்கு வந்த பொது மக்களுக்கு வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் பட்டாளம், டிமலஸ் சாலையில் பெஞ்சல் புயல் கன மழையினால் பாதிக்கப்பட்ட பகுதியை நேரில் சென்று ஆய்வு செய்து, அப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நீர் உந்து நிலையத்தை பார்வையிட்டு, தேங்கிய மழைநீரை உடனடியாக வெளியேற்றுவதற்கு மாநகராட்சி அலுவலர்களை அறிவுறுத்தினார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது:-

பருவமழையைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசு மேற்கொண்ட பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளால் தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், தமிழகத்தினுடைய துணை முதலமைச்சர் அவர்களும் அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து எதிர் வருகின்ற பருவமழையை எதிர்கொள்வதற்காக தயார் நிலையில் அரசு இயந்திரங்களை முடக்கி விட்டதன் எதிரொளியாக கடும் புயல் பெரும் மழையை எதிர்கொள்ள நேரிடும் என்ற சூழல் இருந்த பொழுது அதற்கு ஏற்றார் போல் அனைத்து துறைகளையும் களத்திலே நிற்க வைத்து இந்த பெரும் மழை வெள்ள பாதிப்பை திறமையோடு நிர்வாக திறத்தோடு செயல்பட வெற்றி கொண்ட ஒரு அரசாக இந்த அரசை நடுநிலையாளர்களும், பொதுமக்களும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

முதல்வர் அவர்கள், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, உறுப்பினர் சட்டமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள் ஆகியோர் மட்டுமல்லாமல் திராவிட முன்னேற்றக் கழக தோழமைக் கட்சியினைச் சார்ந்த நிர்வாகிகளையும் களத்திற்கு அனுப்பி நிறைவாக இந்த பெரும் வெள்ளம் மழையை சமாளித்து இருக்கின்றோம். ஒரு சில தாழ்வான பகுதிகளில் இந்த மழைநீர் வெளியேற்றுகின்ற பணியை மேலும் விரைவுப்படுத்துவதற்காக அந்தந்த மாவட்டத்திலே இருக்கின்ற அமைச்சர்களையும், மக்கள் பிரதிநிதிகளையும் முடக்கி விட்டு இருக்கின்றார்.

தற்பொழுது நான் நின்று கொண்டிருக்கின்ற தட்டாங்குளம் என்கின்ற இந்த பகுதியில், புரசைவாக்கம் தானா தெருவில் இருந்து வருகின்ற மழைநீர், புரசைவாக்கம் தானா தெரு, செல்லப்பா தெரு, மூக்கு தெருவை கடந்து, நம்முடைய அங்காளம்மன் கோயில் தெரு, பட்டாளம் போன்ற பகுதிகள் வாயிலாக தற்போது இங்கு பயன்பாட்டில் இருக்கின்ற 320 HP திறன் கொண்ட மோட்டார் மூலமாக தண்ணீர் வெளியேற்றப்பட்டு, நம்முடைய காந்தி கால்வாய் வாயிலாக பக்கிங்ஹாம் சேனலுக்கு சென்று கொண்டிருக்கின்றது, சேரப்படுகின்ற இந்த மழைநீர், கொள்ளளவு அதிகமாக இருப்பதாலும், ஏற்கனவே பயன்பாட்டில் இருக்கின்ற ஆட்சி சுவர் முழுவதுமாக சில மடைந்து விட்டதாலும் இந்த தண்ணீர் உடனடியாக வெளியேற்ற முடியாத ஒரு சூழல் இருப்பதால் தற்போது அதிக அளவு கொண்ட 600 HPக்கு மேற்கொண்ட மின்மோட்டார்கள் பொருத்தப்பட்டு தண்ணீர் வெளியேற்றுகின்ற பணி ஒருபுறம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மறுபுறம் இதற்கு நிரந்தர தீர்வாக நம்முடைய முதல்வர் அவர்கள் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு கூட பெய்த பெருமழையின் பொழுது இங்கே வருகை தந்து ஆய்வு தந்தார்கள். அந்த ஆய்வினுடைய தொடர்ச்சியாக சுமார் 19 கோடி ரூபாய் செலவில் இந்த மழை நின்றவுடன் இந்த பணிகள் துவக்கப்பட்டு அடுத்த பருவமழைக்கு தண்ணீர் தேங்காத ஒரு சூழ்நிலையை நிச்சயம் ஏற்படுத்தி தருவோம் என்ற உறுதியை மேற்கொண்டு இருக்கின்றோம்.

இன்று காலையிலிருந்து எங்கெல்லாம் தண்ணீர் தேங்கி இருக்கின்றதோ, வடிந்து இருக்கின்றதோ அந்தப் அந்தப் பகுதிகளில் எல்லாம் 200 இடங்களில் மருத்துவ முகாம்களை தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவின் பேரில் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கின்றது. அந்த மருத்துவ முகாம்களை இன்றைக்கு நம்முடைய சுகாதாரத்துறை அமைச்சர் அவர்கள் அடையாறில் தொடங்கி வைத்தார். அதே போல மேயர், அவருடைய பகுதியில் மருத்துவ முகாம் சட்டமன்ற பேரவை உறுப்பினர் தாயகம் கவி அவர்களும் காலையிலே துவக்கி வைத்திருக்கின்றோம். தொடர்ந்து இது போன்ற தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கி இருந்தால் உடனடியாக அந்த தண்ணீர் தேக்கத்தை அகற்றுகின்ற பணியை மேற்கொள்வதற்காக வட சென்னை மாவட்டம் முழுவதும் 9 சட்டமன்றத் தொகுதிகளிலும் எங்களுடைய இந்த ஆய்வு தொடரும்.

முதல்வர் அவர்கள் நேற்றைக்கு கள ஆய்வுக்கு வருகை தந்த பொழுது மழைத்துளிகள் நிலத்தை அடைவதற்கு முன்பாக தன்னுடைய காலடி பாதங்களை நிலத்திலேயே பதித்தவர் முதல்வர் அவர்கள். நேற்றைய ஆய்வின்போது ஆங்காங்கே பயணித்துக் கொண்டிருந்த மக்கள் நேரடியாக முதல்வரை சந்தித்து இந்த முறை நான் வில்லிவாக்கத்தில் இருந்து பயணித்து வருகின்றேன். எங்கும் முக்கிய சாலைகளில் தண்ணீர் தேங்கவில்லை என்று எடுத்துக் கூறினார்கள். தற்பொழுது கூட ஒரு சில தாழ்வான பகுதிகளில் தான் இது போன்ற நிலை, இதுவும் அடுத்த பருவமழைக்குள் முழுவதுமாக சரி செய்கின்ற நல்ல சூழல் ஏற்படும்.

கடந்த காலங்களில் பார்த்தால் 13 செண்டிமீட்டர் அளவிற்கு மழை பொழிந்தால் கூட இரண்டு நாட்கள், மூன்று நாட்கள் என்று தாழ்வான பகுதிகளில் தண்ணீர் வெளியேறாத நிலை இருந்தது. முக்கிய சாலைகள் அனைத்தும் துண்டிக்கப்பட்ட நிலை இருந்தது. தற்பொழுது அந்த நிலை இல்லை நாங்களும் பயணித்தோம் நீங்களும் பயணித்து தான் வந்திருக்கிறீர்கள். முக்கிய சாலைகள் முழுவதுமாக பயன்பாட்டிற்கு வந்து இருக்கின்றது. எங்கும் போக்குவரத்து தடை இல்லை இது போன்ற தாழ்வான பகுதிகளில் தான் இதையும் சவாலாக எடுத்துக் கொண்டு அடுத்த பருவமழைக்குள் நிவர்த்தி செய்வோம் என்ற உத்தரவாதத்தை தருகின்றோம்.

நேற்றைக்குக் கூட பிற்பகல் 2.00 மணிக்கு ஆரம்பித்த இந்த வெள்ள நிவாரண பணிகளை நம்முடைய துணை முதல்வர் அவர்கள் முழுவதுமாக பழவேற்காடு ஆரம்பித்து எண்ணூர், மாதவரம், பெரம்பூர், கல்யாணபுரம், ஓட்டேரி, புளியந்தோப்பு என அனைத்து பகுதிகளிலும் நேற்றைய தினம் இரவு 11.00 மணி வரையில் பாதிக்கப்பட்ட இடங்களை சுற்றுப்பயணம் மேற்கொண்டு இருக்கின்றார். நிச்சயமாக இன்னும் இரண்டு மணி நேரத்திற்குள்ளாக அனைத்து பகுதிகளிலும் தண்ணீர் வடிந்துவிடும்.

முதலமைச்சர் அவர்கள் 24/7 உரக்கமின்றி மக்களினுடைய நலனிற்காக, மக்களினுடைய துயர் போக்குவதற்காக அவரும் இயங்குகிறார், எங்களையும் இயக்கிக் கொண்டிருக்கின்றார் அரசையும் இயக்கிக் கொண்டிருக்கின்றார் முழுவதுமாக இயங்கக்கூடிய ஒரு அரசாக இந்த அரசு செயல்பட்டு கொண்டிருக்கின்றது. வெள்ள பாதிப்பை நிர்வாக திறமையோடு வெற்றி கொண்ட அரசாக இன்றைய அரசு உள்ளதாக நடுநிலையாளர்களும், பொது மக்களும் பாராட்டுகின்றனர்.

இவ்வாறு அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது மேயர் திருமதி.ஆர்.பிரியா ராஜன், தாயகம்கவி எம்.எல்.ஏ., மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜே.பிரவீன் குமார், மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், நகர் நல அலுவலர் டாக்டர்.ஜெகதீசன், மண்டல அலுவலர் ஏ.எஸ்.முருகன், மண்டல சுகாதார அலுவலர் டாக்டர். மோகன், மாமன்ற உறுப்பினர்கள் சொ.வேலு, திருமதி.சுமதி, திருமதி.தமிழ்ச்செல்வி, உள்ளாட்சிப் பிரதிநிதி தமிழ்வேந்தன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# பொன். குணசேகரன்

### டிசம்பர் 1 (2021)



மாணவப் பருவத்திலேயே, மாணவர் அணியில் தன்னை இணைத்துக் கொண்ட இவர், என்.மோட்டூர் கிளைச் செயலாளர், நான்கு முறை மத்தூர் ஒன்றியச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் என பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

மத்தூர் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவராக கழகத்தின் சார்பில் போட்டியிட்டு, வெற்றி பெற்று பணியாற்றி, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

சமூக சேவையாற்றியதன் காரணமாக 'சமூக விருதுகள்' பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.